# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 170/2022 நாள்.11.03.2026

PW2- திருமதி. ஆஷா, க/பெ. திரு.சுரேஷ்

1 முதல் 3, 5, 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி வசந்தா எனது தாயார் என்றால் ஆமாம். வாதியின் முகவர் சுரேஷ் என் கணவர் என்றால் ஆமாம். வழக்கு போடுவதற்கு விபரம் என் கணவர் சொன்னார் என்றால் நானும் சொன்னேன். வழக்கு தயார் செய்து பிராதில் கேரளாவிற்கு போய் கையெழுத்து வாங்கினோமா என்றால் அம்மா இங்கு வந்திருந்தார். வழக்கில் எத்தனை அயிட்ட சொத்து என்றால் எத்தனை அயிட்டம் என்று தெரியாது வீடு மற்றும் விவசாய நிலங்கள். விவசாய நிலங்கள் மற்றும் வீட்டின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த கிராமத்தில் உள்ளது என்றால் வேலூரில் வயல் உள்ளது, மருத்துவகல்லூரி அருகில் ஒரு வீடு உள்ளது அவ்வளவுதான் தெரியும். சொத்துகளுக்கு பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் தாத்தா பெயரில் உள்ளது. என்ன பத்திரம் என்று தெரியாது.எ ன் தாத்தா செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தாக சொல்லும் சொத்தின் புல எண், விஸ்தீரணம் தெரியாது என்றால் ஆமாம். முருகானந்தத்திற்கு எழுதி வைத்த சொத்து அவர் அனுபவத்தில் உள்ளது என்றால் ஆமாம். மோகனசுந்தரம் ஒருவீடுகட்டினார் என்றும் அதன் கிரகபிரவேசத்திற்கு நாங்கள் வந்தோம் என்று சொன்னால் ஆமாம். அதில் அவர் குடும்பத்துடன் வசிக்கிறார் என்றால் ஆமாம் ஆனால் சொத்து தாத்தாவிற்கு சொந்தம். குணபாலசுந்தரம் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவர் குடும்பத்தார் தனியாக வசித்து வருகிறார் என்றால் ஆமாம். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள பஞ்சாயத்துக்கள் எந்த தேதியில் நடந்தது என்றால் 2021ஆம் வருடம் தேதி தெரியாது. என் பாட்டி பெயரில் சொத்து இருந்தது என்றால் காவேரி நகரில் உள்ள வீடு பாட்டி பெயரில் இருந்தது. அதை முருகானந்தத்திற்கு செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் என் அம்மா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். என் தாத்தா எப்போது இறந்தார் என்றால் 2008. தாவா சொத்து சம்மந்தமாக என்ன ஆவணம் எழுதி வைத்தார் என்று நேரடியாக தெரியுமா என்றால் எழுதி வைக்கவில்லை. தாத்தா எழுதிய உயில் ஆவணம் தொடர்பாக எப்போது தெரியும் என்றால் வழக்கு போட்டபிறகு தெரியும். என் பிராதில் நாங்கள் சமாதானத்திற்கு போனோம் என்று சொல்லியுள்ளேன் என்றும், பிரமாண வாக்குமூலத்தில் அவர்கள் சமாதானத்திற்கு அழைத்தார் என்று சொல்லியுள்ளேனே எது உண்மை என்றால் இரண்டும் உண்மை. மாமாக்கள் பேச்சுவார்த்தைக்கு அழைத்ததாக

பிராதில் சொல்லவில்லை என்றால் ஆமாம். குணபாலசுந்தரம் மகள் லோகேஸ்வரி திருமணம் நின்று போன விஷயத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிராதில் சொல்ல விஷயத்தை என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முன்னிலைபடுத்தப்பட்டது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.11 17:26:45 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.